180118

Y592P
N18

180118

575.

உ

திருச்சிற்றம்பலம்.

# பள்ளிபத்து.

575
L.18

மூலமும் - உரையும்.

இஃது

சுரந்தலிங்கக் கவிராயர்

அருளிச்செய்தது.

சென்னை:

கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

Y5924
M18
120115.

150118

...தைகளையும், மார்ச்சிடப் பாவனையையும், செய்கையை
...கொண்டு சம்புவின் பிள்ளையானபடியி
னால் சம்புவென நாமகரணம் பெற்று முனிவடிவமாகி
இருக்கின்ற காலத்தில்.

அவ்வனத்துக்கடுத்த மருதூரென்னும் நாட்டிலே தோற்கருவி, துளைக்கருவி, முதலாகிய வாத்தியங்களைக்கொண்டு தேவாலயங்களாகிய சிவாலயம், விஷ்ணுவாலயங்களிலும், இராஜ சமுகங்களிலும் மங்களகரமாகிய வாத்தியஞ் செய்யுங் குலத்திலே ஒருவன் இறந்துபோய் அவன் மனைவியானவள் வாலிபத்திற்றானே அமங்கலியாகி யாதொரு துணையுமில்லாதவளாய் நிராதார சீவனமாய்த் தினந்தோறும் விசாலமுற்று விளங்காநின்ற வனங்களிற்போய் காய், கனி கிழங்கு விறகு முதலானவைகளைக்கொண்டுவந்து விற்பனைசெய்து சீவனநடாத்திவருகின்ற காலத்தில் ஒரு நாள் அந்தச் சம்புசுதனாகிய வாலிபன் இருக்கின்ற வனத்திற்கு இந்தப் பெண்ணானவள் போகக்கண்டு காமங் கொண்டு ஓடிப்போய் அந்த அமங்கலிப் பெண்ணைப் பிடித்துக்கொண்டு புணர்ச்சிக்கழைக்க அப்பெண் அவனைநோக்கி ஓ முனியே! நான் அமங்கலியாய் இருக்கிறேன் என்னைத் தொடுவது நீதி



யல்லவென்று சொல்லியுங் கேளாமல் முனியானவன் அவள் தன் கையைப் பிடித்தபிடி விட்டகலாமல் லச்சையுடனே தடுத்து நிற்க, அமங்கலியான அந்த ஸ்திரீயானவள் அரிதாகிய தவம் பொருந்திய இந்தமுனிவன் ஒருவேளைக் கோபங்கொண்டு நம்மை சபிப்பானென்று மனதில் எண்ணி மனந்தளர்ந்து அவள் முன் தன்னையில் வைத்திருந்த பொற்றாலியைச் சம்புசுதன் கையில் எடுத்துக்கொடுத்து இதை உன்கையினாலே என் கழுத்திற் கட்டிவிட்டால் அதற்குமேல் உனது மனம்போல இசைவதற்கு ஐயமில்லை, என்று கூற அதற்குச் சம்புவின் பிள்ளையாகிய சம்புமுனியானவர் சந்தோஷித்து, அவ்விடத்திலிராநின்ற எருக்கநாரைக் கிழித்து கயிறாகத் திரித்துத் தாலியிற் கோர்த்து அவள் கழுத்திலே கட்டி அங்கே ஒரு பள்ளத்திலே இருவரும் கூடியிருந்து அதுமுதல் மகிழ்ச்சிகளாய் அந்தக் காட்டிலும் இன்னும் பல வனங்களிலும் சஞ்சாரஞ் செய்து புத்திரர்களைப் பெற்று அப்புத்திரர்கள் நாளுக்கு நாளாய் வளர்ந்து பருவபக்குவமாக இருக்கின்றதைக் கண்டு மனைவியானவள் தன் புருடனாகிய சம்புசுதனைப் பார்த்து நம்முடைய புத்திரர்களுக்கு இனி நடக்கவேண்டிய முயற்சி செய்ய வேண்டுமே?

அதற்கு என்ன செய்யலாம்! என்று கேட்கச் சம்பு
முனியானவர் இவ்விடம் விட்டு வேறே இடங்களிற்
சென்று ஒருசாதிப் பெயர் வைத்துக் கொண்டு அவ்
வூரிலிருக்கிற சங்கமர் குழுவினர்களைச் சம்பந்தம்
பண்ணிக்கொள்ளலா மென்று சொல்ல நாயகியான
வள் என்னசாதி என்று பெயர் வைத்துக் கொள்ள
லாம் நீரேசொல்லவேண்டும் என்றுகேட்க சம்புரிஷி
யானவர் வள்ளிக்கொடியருகிற் பிறந்ததினால் வள்ளி
என்று இடத்தைப்பற்றி பெயர் உண்டானதுபோல;
நாம் விடுவாசலில்லாமல் காட்டிலே ஒரு பள்ளத்தில்
சேர்ந்து சந்ததி விருத்தியானபடியினாலே பள்ளச்
சாதி என்று நாமகரணம் வைத்துக் கொண்டு சில
னம் முதலாகிய சம்பந்தங்களும் பண்ணிக்கொள்ள
லாம் என்று சொல்லக் கேட்டு, அந்த மனைவியான
வள் சந்தோஷத்துடனே சம்புமுனியிடத்து விடை
பெற்றுக்கொண்டு தானும் தனது புத்திரர்களும் மறு
தேசத்திற் சென்று தங்களுக்கு மூல புருஷராகிய
சம்புரிஷி திருவாய் மலர்ந்தப் பிரகாரம் பள்ளச் சாதி
யார் என்று பெய்யர் வைத்துக்கொண்டு அங்கே
வாசஞ்செய்யும் குடிகளிடத்தில் அடிமையாகி அவர்க
ளிட்ட வேலைகளையும் கஞ்சை, புஞ்சை என்னும்



பயிர் விர்த்திகளும் செய்துக் கொடுத்து அதினால்
வருகிற படிகளை வாங்கி சீவனஞ் செய்து வருகிற கா
லத்தில் அந்தவிடத்தில் சங்கரசாதிக ளிருக்கக்கண்டு
அவர்களோடு சம்பந்தஞ் செய்து முறை யில்லாமல்
பலவாறாகப்புணர்ந்து குடும்பவிருத்திகள் அதிகமாகி
வாழ்ந்து வருகிற காலத்தில்,

அவர்கள் * பள்ளர் என்கிற பெயர் பதத்தினின்று
பிறந்த * பள்ளியர் என்று பெயரைத் தரித்துக்
கொண்டு அவர்கள் பற்பல தொழில்களைச் செய்து
வருகின்ற காலத்தில் அந்தத் தொழில்களைப்பற்றி
மீன்பள்ளி என்றும், அவரிப்பள்ளி என்றும், வேட்
டைக்காரப் பள்ளி யென்றும், காவற்பள்ளி என்
றும், கூடைகட்டிப்பள்ளி என்றும், சுடலைப்பள்ளி
என்றும், மேவாரிப்பள்ளி என்றும் தங்களை யாளுங்
குடிகளாகிய எஜமான்களுக்குக் கீழ்ப்பட்டு வணங்
கித் துலவாக இருந்து அவர்கள் சொல்லும் ஏவல்க
ளைச் செய்து வருகின்றபடியினால் * 'அக்னியர்'
என்றும் குடிகளுக் கடிமைக் குடையாரானதி
னால் 'உடையார்' என்றும், வயல்களுக்குக் காவற்
காரர்க ளானதினால் 'படையாட்சி' என்றும், கீழ்
மக்களானதினால் 'கவுண்டர்' என்றும், மீன் விற்ப

னைத் தொழிலால் * 'நாய்க்கர் என்றும் இன்னும் அநேகவித தொழில்களால் அநேகவிதமாகிய குலப்பட்ட பெயர்கள் உண்டாகி பூமியின்மீது நெல்லு கம்புமுதலிய பற்பல பயிர் வளமும் அதிகரிக்கும்படி செய்து கொடுத்து அதினால் வருகிற பொருள்களினால் நல்ல ஜீவனத்தாராகி, குடும்பங்களத்து குப்பங்களில் வாழ்ந்து வருகிறகாலத்தில் கல்விப் பயிற்சி இல்லாமையால் வாசிக்கவேண்டுமென்று விருப்பமுடையவராய் வாசித்த ஒரு அம்பட்டனை உபாத்தியாயராக வைத்துக்கொண்டு கல்விப் பயிற்சி செய்து வந்ததினால் அதுமுதல், பள்ளிக் குப்பத்திற்கு அம்பட்ட உபாத்தியாயர்' என்று உலகில் பழமொழியாக வழங்கி வருகின்றது.

இப்படியாகக் கொஞ்ச காலமான பின்பு தங்களுக்குத் தலைவனாக "மழவராயன்" என்று பெயர்பெற்ற ஒருவனை ஏற்படுத்தி அவன்சொற்படி நடத்திவருகிற நாளில், ஒருநாள் மழவராயன் இடத்தில் சாந்தலிங்கக் கவிராயர் என்றொருவர் வரக்கண்டு அவரை யழைத்து ஆசனங்கொடுத்து உட்காரச் சொல்லி நமஸ்காரம் பண்ணினான். அந்த வித்வானானவர் அந்த

* 8-ம் பக்கமுதல் 12-ம் பக்கம் வரையில் காண்க.



மழவராயனை அநேகவிதமாகப் புகழ்ந்து பாடினார். அவைகளைக்கேட்டு சந்தோஷங்கொண்டு மழவராயனானவன், எங்கள் வம்சத்தின் உற்பத்தி பாரம்பரையைக் குறித்துப் பாடல் பாடிக்கொண்டு வந்தால் உமக்கு வேண்டிய திரவியங்கள் கொடுப்பேன் என்று சொல்ல, அதுகேட்டுச் சாந்தலிங்கக் கவிராயரானவர் அப்படியே பாடித் தருகிறேன் என்று உத்தரவு பெற்றுக் கொண்டு தனது கிரகத்திற் சென்று இஷ்டதேவதையாகிய சரஸ்வதி யம்மனைத் தியானித்து சாந்தலிங்க கவிராயர் 'பள்ளிபத்து' என்கிற ஒரு நூலை எழுதிக்கொண்டு மழவராயன் இடத்திற் சென்று அவன் சமுகத்தில் பள்ளிபத்தென்னும் நூலினைச் சாந்தலிங்கக் கவிராயர் பிரசங்கித்தார். அதைக் கேட்டு மழவராயனும், அவன் பந்துவர்க்கங்களும் சந்தோஷித்து அவருக்கு வேண்டிய திரவியங்களைப் பரிசாகக் கொடுத்து அனுப்ப அந்த வித்துவானானவர் தனது இருப்பிடம் போய்ச் சேர்ந்தார், அதன் பின்னர் மழவராயனும் அவன் பந்து வர்க்கங்களும் வாழ்ந்துகொண் டிருந்தார்கள்.

* 'பள்ளர்கள், பள்ளியார்கள்' என்னும் ஒரு வகைப் பெயர்களுக்கு உற்பத்தி மூலபதம் எவ்வாறெனில்.

'ஊரில்' சிறியதூருக்குச் 'சிற்றூர்' என்றும், 'பள்ளி' என்றும் பெயர் வந்திருக்கிற பிரகாரம், குலத்தில் தாழ்ந்த சிறிய குலத்தவர்களுக்கும், பள்ளிக் குலமென்று பெயர் வந்திருக்கின்றது.

'நிலத்தில்' தாழ்ந்த நிலத்திற்குப் பள்ள நிலமென்று பெயர் வந்திருக்கிற பிரகாரம் குலத்தில் தாழ்ந்த குலத்தவர்களுக்கும், பள்ளக்குலமென்று பெயர் வந்திருக்கின்றது.

ஆகவே, சிறிய குலம் என்பதற்கும், தாழ்ந்த குலம் என்பதற்கும் பொருள் ஒன்றாகையால் 'பள்ளியர் குலம் பள்ளர் குலம்' என்பது ஒருபொருள் கொண்டு ஒருவகைக் குலத்தவர்களுக்கே பூர்வமுதல் நாளது பரியந்தம் நூல் வழக்கத்திலும், உலக வழக்கத்திலும் வந்து வழங்குகிறதுமன்றி குடும்ப குலமென்றும், நீசகுலமென்றும், களகுலமென்றும் வழங்குகின்றது இதன் உண்மையைத் தமிழ் நாட்டின் பலவிடங்களில் நிலைபெற்றிருக்கும் வழக்கத்தாலும் அறிவதுமல்லாமல் நூல் வழக்கத்திலும் இங்ஙனம் இரண்டொரு கவிகளைப் பேர்த்தெழுதிக் காட்டுவோம். அவை வருமாறு;

**முக்கூடற் பள்ளுநாடகம் சஅ-வது கவி.**

**கலிப்பா.**

பள்ளர் குலத்தில் வரினுமிரு பள்ளியர்க்கோர்
பள்ளக் கணவனெனிற் பாவனைவே றாகாதோ
கள்ளப்புள் வாய்பிழித்த காரழகர் முக்கூடல்
கொள்ளத் தமுது குடித்தாங்கள் கூடினரே.



**ஷை நாடகம் சகூ-வது கவி. சிந்து-அடதாளம்**
**காம்போதி.**

உத்தர பாகமான சித்திர நதிக்குள் தென்பால் ஓடும்பொருனையுடன் கூடும்போதே, பத்தனைகாலமுந் தொட்டு வித்தனைகாலமுங் கண்டு அடியடி வாழையாய்க் குடியில் வந்தேன், பத்திலே பதினொன்றாய்க் வைத்தானெனைக் குடும்பன் பண்டே சரதிக் கட்டிக் கொண்டானென்னை, முத்தமிழ் நாட்டழகர் கொத்தடியருக்கான முக்கூடன் மூத்த பள்ளியானே யாண்டே.

**ஷை நாடகம் உகூ-வது கவி. சிந்து-அடதாளம்**
**கல்யாணி.**

பஞ்சடிசகஞ்சடி கூடச்சே காடச்சே இடக் தேடச்சே கல்லணிலஞ்சனல் கரிக்கச்சே கரிக்கச் செங்கறிபொறிக்கச்சே பணியாரம் வாரித் தின்னச்சே கண்டுகால் வச்சக்கிண்டச்சே கத்தைகறிவைச் சவிக்கச்சே பூமைச்சிவைச்சு உரிஞ்சச்சே கள்ளுசாராயம் குடிக்கச்சே கஞ்சாப் புகையும் வாங்கச்சே சரிக்கல்ல மறைவிலே முத்தந்தரச் சொன்னாலடி பள்ளியரே.

**ஷை நாடகம் எஉ-வது கவி. சிந்து அடதாளம்**
**புன்னாகவராளி.**

திங்கள் மும்மாரி யுலகெங்கும் பெய்யவே தெய்வத்தைப் போற்றிவந்து கைதருங்கால், பொங்கலுமிட்டு தேங்காயும்

கரும்பும் பூலாயுடையார்க்கு சாலக்கொடிகள், குங்குமத் தோடுஞ் சந்தனங் கலந்து குமக்காயுடையார்க்குச் சாத்துங்கள், கங்கணங்கட்டியே யேழு செங்கடாவுங் கரையடிச் சாத்தர் முன்னே விரையவெட்டும், பூந்தத்தலைச் செஞ்சாவச் சாத்திரத்தாலே புலியூருடையார் கொள்ளப்பிதானிடும், வாய்த்தச் சாராயமுஞ் சள்ளுங்கள்ளும் வடக்கு வாய்செல்வி யுண்ணக் குடத்திலவையும், தோத்திரம் பலரூங் கூத்தாடிக் கைதொழுது தொழுதுவேண்டு மழை பெய்யவே, யேத்துமசுரர் பேரை வாழ்த்தி வாழ்த்தியே, யெல்லாரும் வாரும் பள்ள ரெல்லாருமே.

இந்த நான்கு கவிகளிலும் வருகிற பள்ளர், பள்ளியர், குடும்பர் என்பன ஒருவகைக் குலத்தவர்களுக்கே சொல்லியிருக்கின்றது. மேலும் ஆகம புராணங்களில், பொங்கலிடுகிறதும், ஆடு கோழி வெட்டுகிறதும், கள்ளு சாராயங்களை வைத்துப் படைக்கிறதும், தலைமையினரைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறதும், பிரம க்ஷத்திரிய வைசிய ரென்னப்பட்ட மேற்பால் குலத்தவர்கள் வணங்கப்படாத காத்தான், கருப்பன், காட்டேரி, பாவாடைராயன், மதுரைவீரன், மாரி இன்னுஞ் சில பிசாசுகளை தெய்வமென்று வணங்குகிறதும் இவை முதலானவைகளும் கீழ் குலத்தவர்களுக்குரிய வழக்கமென்று கூறியிருப்பதற்கு இந்த 72-வது கவி இசைந்திருக்கின்றது.



13 15118

## புலிப்பாணி மஹாரிஷி அருளிச்செய்த ஜாலத்திரட்டு

### 34-வது கவி.

தானேதா னின்னமொன்று சொல்லக்கேளு தயவான பள்ளியர்கள் மரணமானால், கோனேதா னவர்களை யிரும்பினாலே கொற்றவனே வளையலது போட்டிருப்பார், தேனேதா னவர்களைத்தான் தகனம்பண்ணிச் சேருகையில் வளையலுடன் வைப்பார்பாரு, மானேதான் காடாற்று முன்னேயப்பா … யாகத் தானெடுத்து வைத்துக்கொள்ளே.

இந்தக்கவியில் பள்ளிகள் இரும்பு ஆபரணம் அணியப்பட்டவர்கள் என்று கூறியிருப்பதாலும், 10-வது அத்தியாயம் 52-வது சுலோகத்தில் (சண்டாளர்=) கவுண்டர்கள் என்றும் இரும்பு பித்தளை இவைகளாற் செய்யப்பட்ட பூஷணங்களை அணியவேண்டும் என்று சொல்லி யிருப்பதாலும் பள்ளிகுல மென்பதும் கவுண்ட குலமென்பதும் ஒரு குலமென்று தெரிய வருகின்றது.

* 'அன்னியர் என்பதை சிலர் வன்னியர்' என்று வகை தெரியாமல் சொல்லிக்கொள்ளுகிறார்கள். வன்னி என்பது பிரமசாரிக்கும், கிளிக்கும், வன்னிமரத்திற்கும், தீக்கும், பெயர் தீயா வன்னியர் என்பது பாகிய சாதியாகிய கீழ் மக்களுக்குரிய பெயர்.

ஊருக்குப் புறத்திலிருக்கிற மலைச்சார்பான நிலத்திற் கெல்லாம் குறிஞ்சி என்று பெயர் அந்த குறிஞ்சி நிலத்திற்கு பள்ளி என்று ஒரு பெயர் இருப்பதால் அதில் வாசஞ் செய்

இற குழுவினர்களுக்குப் பள்ளியர் என்ற பெயரும், ஊருக்கு அன்னியில் வாசஞ் செய்கிறபடியால் அன்னியர் என்ற பெயரும் வந்திருக்கின்றது. இவர்களுள் குறவர், மறவர் என்று பிரிவுகளுண்டு. இதுபோல சமுத்திரக் கரையோரத்திற் கெல்லாம் பட்டினம் என்று பெயர் அதில் வாசஞ் செய்கிற குழுவினர்களுக்குப் பட்டினவர் என்று பெயர் வந்திருக்கின்றது. இவர்களுள்ளும் கரையார் செம்படவர் என்று பிரிவுகளுண்டு. 'பள்ளி, பட்டினம், சிற்றூர், குறிஞ்சி, சீத்திரை, என்னும் பெயர்கள் ஒருவகைப் பெயர்கள் என்பதற்கு திவாகரம் நிகண்டு பிங்கலந்தை இரேவணசித்திரம் முதலிய நூல்களில் காண்க.

* விற்பனைத் தொழிற் செய்பவர்களுக்குச் செட்டி, நாய்கர் வணிகர், வர்த்தகர், வியாபாரிகள் என்று பெயர் வரும்.

சாதிநூல் விராத்தியர் உற்பத்தி 8-வது கவி.

* குறிதரு வணிகர் தங்கள் கோதைமான் மதிகண் டாவி
மறிதர வருந்திப் புல்க வருஞ்சிலைக் கடையான் றந்தோர்
செறிதரு குலத்தி லாற்றிற் செப்பரு கச்சா நூற்குல்
புதிகொடு கொழுமீன் மீளப் பதிக்குமீன் பள்ளி யாவார்.

நூல் வரலாறு முற்றிற்று.

உ

# பள்ளிபத்து.

## மூலமும்-உரையும்.

விநாயகர் வணக்கம்.

காப்பு

நேரிசை வெண்பா.

சீராரு மாண்டேகர்! சேயாகுஞ் சம்புமுனி
பேரார் சரிதைதமிழ்ப் பேசவே — காராரும்
ஆனையுரிப் போர்வைகளும் அஞ்செழுத்தா னின்ற
யானையினை யேபணிகு வாம். [செல்வ

## நூல்.

விருத்தம்.

செப்பரிய பொழில்வளமுங் கான்யாறும் பலவிலங்குஞ் செறிந்தெங்காலும், ஒப்பிலுயர் முனிவோருந் திகழ்தரு தண்டக வனத்தி லுலவுஞ் செய்ய, விப்பிரன்மாண் டேகமுனி வரன்வழியால்வந்துதித்துமேவுந் தூய, பொற்பிலகு சம்புமுனி தனதுவர லாறெடுத்துப் புகலுவேனே.

(இதன் பொருள்.)—சொல்லுதற்கரிதாகிய வளப்பம்பொருந்திய சோலைகளும், காவ்யாற்றினையும், அனேகவிதமான மிருக செந்துக்கள் எந்நாளிலும் சஞ்சரிக்கவும், ஒப்பில்லாத உயர்வு பொருந்திய தபோதனர்கள் விளங்கிய தண்ட காரண்யத்தில் வாசஞ் செய்கின்ற செவ்விதராகிய பிராமணனென்னும் மாண்டுக முனிவன் தன்புத்திரனாகிப் பிறந்து பரிசுத்தம் பொருந்திய அழகுநிறைந்த சம்புமுனி யென்பவருடைய சரித்திரத்தை என்னறிவினால் எடுத்துச் சொல்லுவேன்.—எ - று. (௧)

மாண்டுகனெனு முனிவனுறையுமிடந் தனியொரு
நாள் மாலைப்போதில், நீண்டவடி விலங்குதந்திர
விலங்கெனும்பெண் ணரியொன்று நெறியேசெல்லக்,
கண்டனனு யடுத்ததன்மேல் மயன்மிகுந்து புணர
வுளங் கலங்கியப்பால், மீண்டயர வும்பயமு முற்
றுத்தன் குழுவினுடன் மேவுங்காலை.

(இ-ள்.)—மாண்டுக முனியென்னும் பிராமணன் வாசஞ் செய்கின்ற தண்டக வனத்தில், ஒரு சாயங்காலம் அந்தி காலத்தில் நீண்ட திருவுருவத்தை யுடைய தந்திர மிருகமாகிய ஒரு பெண்ணரியானது, ஒழுங்காக அம்மார்க்கமே போக, அந்தமுனியானவன் பார்த்து அருகிற்சென்று அதன் மேல் மிகுதியாகிய காமங்கொண்டு பிடித்துப் புணர்ச்சி செய்யவே நரியானது மனங்கலங்கி அதன்பின்பு திரும்பிப் பரதவிக்கவும், பயத்துடனே தனது கூட்டத்துடன் சேரும் போது.—எ - று. (௨)



கருப்பமுற்றுங் கதனளவு கழிந்ததற்பின் வயறு
ளைந்து கனஞ்சேர்மாக்கள், உருப்பொலிந்துற் பவி
த்திடக்கண் டமுதூட்டி வளர்க்கவளர்ந் தொளிருங்
கானி, லிருக்கும்வன சரரோடு சேர்ந்தடுத்துப் பல
வார்த்தை யியைந்துசால, விருப்பமொடு வயதிருப
தாய்ச்சடையுந் தாடியுமாய் மேவும்போது.

(இ-ள்.)—கருப்பமுண்டாகி அவ்விடத்தில்மாதஞ் சரியானபின்பு கருப்பவாதனைப்பட்டு மேன்மை பொருந்தியமாக்கிடவடிவாய் விளங்கிப்பிறந்திட, நரியானது பார்த்துத்தனதுபாலை யூட்டிவளர்க்கவளர்ந்தும், சேயானவன் விளங்கிய காட்டகத்தில் சஞ்சரிக்கின்றவேடர், குறவர்களுடனே சேர்ந்திருந்து அனேகவிதமாகிய மொழிகளைக் கற்றுக்கொண்டிருந்த விருப்பத்துடன் இருபதுபிராயமாகி சடையுந்தாடியும்பொருந்தி இருக்கின்ற காலத்தில்.—எ-று. (௩)

உற்றருகில் விளங்குதிரு மருதூரில் வாத்தியஞ்
செய் துரமோர்தங்கள், சுற்றமதி லொருவனிறந்
தமங்கலியா யவன்மனைவி துயருற்றேங்கி, மற்ற
டவி தனிற்றினஞ்சென் றெரிகரும்பு கனிகிழங்கு
வகைகொணர்ந்து, விற்றுளநாட் கழிப்பவளைச் சம்
புசுதன் கண்டதிக விரகமுற்றே.

(இ-ள்.)—சம்புசுதன் வசித்திருக்கின்ற வனத்திற்குச் சமீபத்தில் எல்லாவளங்களும் பொருந்தி இருக்கப்பட்ட மருதூரென்னும் நாட்டில், தோற்கருவி, துளைக்கருவிகளைக்

கொண்டு வாத்தியஞ்செய்து சிவனஞ்செய்யுங் குலத்தவர்
களாகிய ருத்திரர்குலத்தில் ஒருவன் இறந்துவிட அமங்க
லியாகிய அவன் மனைவியானவள் மிகுந்த துக்கமுற்றழுது
க்கொண்டு தினந்தோறும் காட்டில் சென்று எரிகரும்பு,
கனி, கிழங்குமுதலாகிய பலவிதமான பண்டங்களைக்கொண்டு
வந்து விற்றுச் ஜீவனஞ்செய்பவளை சம்புசுதன்கண்டு அதிக
மோக முற்றான்.—எ-று. (௬)

அடுத்தோடிப் பிடிக்கவவ ளமங்கலிநா னெனவுரை
க்க வகலானானந், தடுத்திடக்கண் டருந்தவரு
மிவன்சினந்து சபிப்பனென்று தளர்ந்து வையிலி,
எடுத்துவந்த பொற்றாலி தனைக்கொடுத்து வாலிபந்
தா வினசயவையம், அடுத்தெருக்கன் கயிற்றதனி
லவள்கழுத்தி லணிந்துள்ளம் விபந்துமன்றே.

(இ-ள்.)—அருகிற்சென்றோடிப் பிடிக்க அந்த ஸ்ரீயான
வள் யான் அமங்கலி என்று முனிவனுக்குச் சொல்லியுங்
கேளாமல் முனியானவன் அவள் கையைவிட்டுப் போ
காமல் இலச்சையுடனே தடைசெய்ய, ஸ்ரீயானவள் அரி
தாகிய தவம்பொருந்திய இம்முனிவன் ஒருவேளைக்கோபங்
கொண்டு நம்மைச் சபிப்பானென்று மனதில் யோசித்து
மனந்தளர்ந்து தனது பையில்வைத்திருந்த பொற்றாலியைச்
சம்புசுதன்கையில் எடுத்துக்கொடுத்து நீர் இந்தத்தாலியை
என் கழுத்தில் கட்டி விட்டால் உம்முடைய மனதின்படி
இசைவதற்கு ஐயமில்லை யென்றுகூற அதற்குச் சம்புசுதன்



அங்கே யிருந்த எருக்கஞ்செடியைக் கிழித்துக் கயிறுசமுறிக்கி
அந்தக் கயிற்றில் தாலியைக் கோர்த்து அவள் கழுத்தில்
அணிந்து சந்தோஷித்து.—எ-று. (௭)

இருவருமோர் பள்ளமதிற் புணர்ந்தந்நாள் முதலெ
வொருமித் திணங்கிப்பன்னா, டருமினிய சந்ததிகள
னந்தமதாய் விருத்திகொண்டு தழைக்குநாளி, லரி
வையிவர்க்குரிய மணஞ் செய்வதற் கென்னினத்த
வரை யழையுகாலன்னம், புரிவதற்குத் தக்கவழிபுக
லெனவுஞ் சம்புசுதன் புகலுவானே.

(இ-ள்.)—அந்த இரண்டுபேரும் ஒருபள்ளத்தினிடத்
திலே புணர்ச்சியாகி பின்பு அந்நாள் முதலாக ஒன்றாகக்
கூடி வெகுகாலமாய் இனிமைதராநின்ற அநேக புத்திரர்
களைப் பெற்று விபரீதமாகச் செழித் திருக்கின்ற காலத்
தில் அப்பெண்ணானவள் இந்தப் புத்திரர்களுக்கு கலியா
ணஞ் செய்வதற்கும், எங்கள் சம்பந்தமுறைமையாரைச் சேராததன்
மை செய்வதற்கும், தகுதியாகிய வார்த்தையைச் சொல்
லுமென்று கேட்கச் சம்புவின் புத்திரனான சம்புசுதன்
சொல்லத் துடங்கினான்—எ-று. (௮)

உள்ளமரபினை யடுத்து வள்ளியைப்போ லிடப்
போரா யுலகிலுள்ளும், பள்ளமரபோர் பெயர்பூண்டு மற்
றவிடங்களில் வாசம்பண்ணு நம்போற், றள்ளரிய
குலத்தவரைக் கலந்தடுத்த சம்பந்தந் தழைக்கச்செய்
து, கொள்ளுதற்கு வேறென்ன குறையெனவே சம்பு
சுதன் கூறக்கேட்டே.

(இ-ள்.)—தனக்குள்ள தாய் தந்தை வம்சத்தை நீக்கி வள்ளிக் கொடியருகிற் பிறந்த வள்ளியைப்போல இடத்தைப்பற்றிய பெயராக பூலோகத்தில் எந்நாளிலும் பள்ளத்தி னிடத்தில் புணர்ந்தபடியால் பள்ளர் குலமென்று பெயரை வகித்து வேறே இடங்களில் சஞ்சரிக்கின்ற நம்மைப்போல் நீக்குதற்கரிய இனத்தாருகிற் சேர்ந்து உறவினர்கள் விசேடமாகச் சேர்த்துக்கொள்ள வேறே சமுசயமென்ன என்று சம்புபுத்திரனுனவன் கூறியவார்த்தையைக்கேட்டு.—எ - று. (எ)

அந்தவகைதமதுபெருங்குழுவோடு சேர்ந்தகன்று
மன்றா ரதனிற்சென்று, முந்தியுரைத்திட வண்ண
முயன்றெளிய பள்ளரென மொழிந்துமாறு, வந்தனை
ஞ்செய் தெவர்களுக்கு மன்னியராய் பலகுகாலம்
வழங்கிவந்து, பந்தமுறவ தன்பின்னேர்ப் பள்ளியெ
னப் பெயர்புனைந்து பாரின்மனனே.

(இ-ள்.)—சம்புமுனியானவர் சொல்லிய அர்த்தப்படியே தன்னுணேய பெருங்கூட்டத்துடனே கூடிக்கொண்டு அவ்வனத்தைவிட்டு நீங்கி ஊருக்கு அன்னிய இடங்களிற் சென்று முன் தங்களுக்கு மூலபுருஷராகிய சம்புரிஷி திருவாய்மலர்ந்தருளிய பிரகாரம் முயற்சியுடனே எளிதாகிய பள்ள சாதியார் என்று பெயர்ச்சொல்லி வழங்கிக்கொண்டு நீங்காமல் எவருக்கும் வழிப்பட்டு வணங்கி, * அன்னியர் என்கிறபெயரை உடையவராய் அநேக நாளாகச் சொல்லி வழங்கிவந்



தும் அதன், பின்னர்ப் பூமியின்மீது பள்ளியர் என்கிற பெயரையுந் தரித்துக் கொண்டு.—எ-று. (அ)

அம்புவியெங் கிளும்பரவிப் பலதொழிலும்புரிந்து
மண்ணி லடுத்தகன்னற், கம்புசெந்நெற் கதலியிளங்
கமுகொடுபற் பயிர்வளமுங் கதிக்கச்செய்து, பண்
பின்மிகுங் குப்பத்துக் குடியாகும் பள்ளியர்தங் குலத்
துதித்தபாலா, தென்குலவு மழவரங்கா வுனதுகுல
வழியிதனைத் தெரிந்திடாயே.

(இ-ள்.)—பூமியினிடத்து மிகுதியாக எந்த விடத்திலும் பரவிக்கொண்டு அனேக தொழிலைச்செய்தும், பூமியில் நெருங்கிய கரும்புகளும், கம்புகளும் செவ்விதாகிய நெற்பயிர்களும், வாழைத்தோப்புகளும், பாக்குமரத் தோப்புகளுடனே இன்னும் பற்பல பயிர்வளமும் அதிகரிக்கும்படி செய்து அழகு நிறைந்த குப்பங்களில் குடியிருக்கின்ற பள்ளியர்குலத்திலே பிறந்த குமாரனே, அழகுநிறைந்த மழவரங்கனே உன்னுடைய மரபின் ஒழுக்கை யறிந்து கொள்ளுவாய்.—எ-று. (௯)

படையாட்சி யுடையாராய்க் கவுண்டரெனும் பல
வாறுயப் பலபேர்பூண்டு, சடையாருஞ் சம்புமுனிக்
கோத்திரங்கொண் டெந்நாளுந் தழைக்கும்வீர,
புடைமேவி யினத்தவர்சூழ் தரவிளங்கும் புனிதா
நம் புலவர்க்கியுங், கொடையாள னென்னுமழவ ரங்கா
நின்மரபின்முறை கூறினேனே.

(இ-ள்.)—படையாட்சி என்றும், உடையாரென்றும், கவுண்டரென்றும் இன்னும் அநேகவிதமாகிய பலபல நாமங்களைத் தரித்துக் கொண்டு சடாபாரத்தையுடைய சம்புரிஷியின் கோத்திரத்தைத் தரித்து எந்தகாலமும் விசேஷித்திருக்கும் வீரனே, இலைத்தார்கள் யாவரும் பக்கங்களின் மேவியிருக்கப் பிரகாசிக்கும் புண்ணியவானே, நன்மை பொருந்திய வித்வான்களுக்குப் பொருள் கொடுக்கா நின்ற வள்ளலாகிய மழவராயனே உனது குலத்தினது ஒழுங்கினையான் சொல்லினேன்.—எ-று. (40)

பள்ளி பத்து

முற்றிற்று.

---

மகா கவியாகிய கம்பநாட்டாழ்வார்

செய் கவி.

குமிண்டியும் பண்ணையுங் கூடமுளைக்கின்ற கொல்லைக் கம்பை, நிமிண்டியு மூறியுந் தின்னவல்லோரிந்த நீணிலத்தில், குமிண்டியங் காய்தன்னை மொட்டையம்பாலெய்யுஞ் சூரர்கண்டீர், நமண்டியிற் பள்ளிகளத்தனைப்பேர்களும் நல்லவரே.

150118
சென்னை-600 005

ஊ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனி,
கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை—1918

# புத்தக விளம்பரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| நீதிநெறிவிளக்கம் இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன் | 0 | 6 | 0 |
| கம்பராமாயண வசனம் 2-வால்யம் படங்களுடன் சுத்தபதிப்பு ... ... ... ... | 4 | 0 | 0 |
| கம்பராமாயணம் பாட்டு 2-வால்யம் ... ... | 6 | 0 | 0 |
| பாரதவசனம் 4-வால்யம் ... ... ... | 10 | 0 | 0 |
| பாகவதம் வசனம் 2-வால்யம் ... ... | 4 | 0 | 0 |
| ஞானக்கோவை ... ... ... | 1 | 0 | 0 |
| தாயுமானவர் மூலம் ... ... ... | 1 | 4 | 0 |
| தாயுமானவர் மூலமும் உரையும் ... ... | 3 | 8 | 0 |
| பட்டணத்தார் மூலமும் உரையும் ... ... | 2 | 8 | 0 |
| பட்டணத்தார் புராணம் ... ... ... | 1 | 4 | 0 |
| மூவர்தேவாரம் அடங்கன்முறை (கிக்கிலேஸ் கடிதம்) ... ... ... | 4 | 0 | 0 |
| பக்தவிஜயம் ஒரேவால்யம் எல்லா தாசர்களுடைய சரித்திரம் படங்களுடன் (கிக்கிலேஸ் கடிதம்) | 3 | 0 | 0 |
| புலவர்புராணம் ... ... ... | 2 | 8 | 0 |
| தனிச்செய்யுட் சிந்தாமணி இது கொட்டாம்பட்டி கருப்பையாபாவலரவர்களால் தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டது ... ... ... | 2 | 0 | 0 |
| பெரியபுராண வசனச்சுருக்கம் 63-நாயன்மார்களின் திருவுருவப்படங்களுடன் (புதியபதிப்பு) | 0 | 12 | 0 |
| நாலடியார் மூலமும் உரையும் ... ... | 1 | 6 | 0 |
| திருப்புகழ் 4-பாகம் ... ... ... | 1 | 0 | 0 |

வ. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனி, சென்னை.